சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 06.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 47/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | நக்கீரன் |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து |
| கிராமம் | : | கூத்தாநல்லூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | தனி வட்டாட்சியர், கூத்தாநல்லூர் |
| வயது | : | 47 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கூத்தாநல்லூர் தனி வட்டாட்சியராக பணி செய்து வருகிறேன். கடந்த 2022 ஆம் வருடம் திருவாரூர் வட்டாட்சியராக பணியிலிந்தபோது திருவாரூர் தாலுக்கா உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தியாகராஜபுரத்தை சேர்ந்த ராமசாமி மகன் ரவி என்பவரின் சாதி சான்றிதழ் வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன் பேரில் அவர் தாழ்த்தப்பட்ட இந்து பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என சாதி சான்றிதழ் வழங்கினேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார் விவரம் சென்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.06 18:34:26 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.